1980 பிப்ரவரி 7]

உடனடியாக இந்தப் பொறுப்பை நகராட்சி மன்றங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று ஒரு உத்தரவை உடனடியாக அரசு பிறப்பிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பொதுவாக இந்தக் கட்டணக் கழிப்பிடங்கள் சுத்தமான நிலையில்தான் பராமரிக்கப் படுகின்றன என்றுதான் அரசுக்குத் தெரியவருகிறது, குறிப்பிட்டு ஏதாவது புகார் தந்தால் அதைப்பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம்,

திரு என். கிட்டப்பா : இத்தகைய பொதுக்கழிப்பிடங்கள் உள்ள சிலயிடங்களில் சிறுநீர் கழிக்கக் கூட பத்துக் காசு வாங்கிக் கொண்டுதான் உள்ளே அனுப்புகிறார்கள். அதைக் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: கட்டணக் கழிப்பிடங்கள் என்றால் கட்டணம் கொடுத்துத்தான் அதற்குரியதைப் பயன் படுத்த வேண்டும். சில இடங்களில் கட்டணம் இல்லாத கழிப்பிடங்கள் பக்கத்தில் இருக்கின்றன, அதைப் பயன் படுத்தலாம்.

சிவலிங்கபுரம் பள்ளிக் கட்டிடம்.

*வினா எண், 95— திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவில்பட்டி தாலுகா கடம்பூர் பேரூராட்சி சிவலிங்கபுரம் கிராமத்தில் 1967–ல் ஆரம்பப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டப்பட்டு கட்டிடம்பூர்த்தி பெறாமல் மரநிழலிலும் ஓலைக் குடிசையிலும் பள்ளி நடத்தப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில் அதற்கான காரணம் என்ன?

(இ) கட்டிடம் கட்டி முடிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) தெரியும்.

(ஆ) பள்ளிக் கட்டிட வேலை கதவு நிலைமட்டம் வரை கட்டப்பட்டு மீதமுள்ள வேலை பேரூராட்சியில் நிதி வசதி இல்லாத காரணத்தினால் செய்ய இயலாமல் நிறுத்தப்பட்டது.

(இ) பாக்கி வேலையை கோவில்பட்டி உதவி கோட்டப் பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதி பெற்று 31-3-80–க்குள் முடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

[முற்பகல் 10.00]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நிதி வசதி இல்லாததன் காரணமாக செய்யவில்லை என்று நான் நினைக்கிறேன். ஏற்கனவே அந்தப் பேரூராட்சி மன்றத்தில் இருந்த நிர்வாக அதிகாரி முறைகேடு செய்ததன் காரணமாக அந்தக் கட்டடம் தடைபட்டதாகவும், அது விரைவிலே கட்டி முடிக்கப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே, 10, 12 ஆண்டுகள் ஆகியும் அப்படியே, அதே நிலையில் நிலைமட்டத்திலேயே இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி, இந்த 80வது ஆண்டுக்குள்ளேயாவது அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வதோடு, அந்த முறைகேடு செய்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்காமல், கட்டிடம் இல்லாமல் குழந்தைகளைத் தண்டனைக்கு, அவஸ்தைக்கு உள்ளாக்குவது சரியாகாது. எனவே, உடனடியாக அந்தக் கட்டிடத்தை முடிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 31-3-80 க்குள் கட்டி முடிக்கப்படும் என்று உறுதியாக நம்புகிறேன்.

ஏற்காட்டிலுள்ள தேயிலை, காப்பித் தோட்டத் தொழிலாளர் ஊதியம்.

*வினா எண். 96— திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஏற்காட்டில் உள்ள தேயிலை, காப்பித் தோட்டத் தொழிலாளிகளுக்கு மற்றப் பகுதிகளில் உள்ள தேயிலை, காப்பி தோட்டத் தொழிலாளிகளுக்குத் தரப்படுவதுபோல் கூலி நிர்ணயம் செய்யாதது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) அரசுக்குத் தெரியும்.

(ஆ) 1975-ஆம் ஆண்டு அரசினரால் தோட்டத்தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக் குழு தன்னுடைய பரிந்துரையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியத்தை மாற்றி நிர்ணயம் செய்கையில் ஏற்காடு, சேர்வராயன் பகுதியில் உள்ள மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் மற்றப் பகுதி